OS.No. 370/2018

Date : 19.01.2026

Witness Name & Rank – பழனிச்சாமி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1970 இல் திருமணம் நடந்தது. எனது மாமனாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 மகன் மற்றும் 1 மகள் ஆகும். மேற்படி 3 மகன்களுக்கும் மகளுக்கு பிறகு தான் திருமணம் நடந்து என்றால் சரிதான். நான் எனது மாமனாரை பார்த்துள்ளேன் என்றால் சரிதான். எனது மாமனார் எப்போது காலமானார் என்றால் 20.05.1996 ஆகும். எனது மாமனாருக்கு எவ்வளவு சொத்து இருந்தது என்றால் சுமார் 12 ஏக்கர் இருக்கும் அதில் ஐந்து ஏக்கர் அவரது பூர்வீக சொத்தாகும் 7 ஏக்கர் அவர் சுயமாக வாங்கியதாகும். எனது மாமனாருக்கு விவசாயம் தான் முக்கிய தொழில் என்றால் சரிதான். எனது மாமனார் சென்னிமலை கவுண்டரும் அவரது சகோதரராக மாரப்ப கவுண்டரும் பாகப்பிரிவினை செய்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.
2. மேற்படி பாகப்பிரிவினை தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது ஆனால் ஆவணத்தை பார்த்துள்ளேன். எனது மாமனார் பாகப்பிரிவினை செய்த பிறகு எனது மனைவியும் அவரது மூன்று சகோதரர்களும் சேரத்தான் விவசாயம் செய்து வருவதாக எடுத்துச் சொல்ல ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் நாங்கள் அவ்வப்போது சென்று நிலத்தை பார்த்து வருவோம்.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B..L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.